## பொலன்னறுவை மாநகர சபை - 2020

-------------------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலன்னறுவை மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பொலன்னறுவை மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் வினியோகிக்கப்பட்ட 2019 திசெம்பர் 31 ஆந் திகதிய 2019/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு முறைமையின் படி சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமையால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i) ஈ (iii) உப பரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i) ஈ (iv) பரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் 1.2.1 (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| பந்தி | நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களில் வெளிப்படுத்தாமை | | |
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை | நிதிக் கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அதாவது ஆரம்ப பாதீடு, | கொரோனா தொற்றுநோய் நிலைமையினால் | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| கணக்கீட்டு நியமம் - 2017 3.9 ஆம் பந்தி | இறுதி பாதீடு மற்றும் அதற்கிடையே போதியளவான வேறுபாடுகள் காணப்படுமாயின் அதற்கான காரணங்களை வெளிப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்பார்த்த மட்டத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | வேறுபாடுகளுக்குரிய காரணங்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 4,755,820 பெறுமதியான நூலக புத்தகங்களின் இருப்பு சொத்தாக கணக்கீடு செய்யப்படாமல் திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது. | 2019/02(i) சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீட்டு குறிப்புகளில் காண்பித்தல் வேண்டும். | கணக்கீட்டு நியமத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அத்தியாயத்தின் பிரகாரம் சொத்தாக இனங்காணப்படல் வேண்டும். |
| (ஆ) வருமானங்களை இனங்காணும் தொகுதியொன்றாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மூலதன ஒதுக்கத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 1,908,000 தொகையான மூலதன மானியம் மீளாய்வாண்டிற்குரிய வருமானமாக கணக்கு வைக்கப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | விரிவான வருமானக் கூற்றில் ஆண்டின் சீராக்கங்கள் செய்யப்பட்டிருந்தமையின ால் உரிமை மூலதன மாற்றல் கூற்றில் காலப்பகுதியின் சீராக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்குரிய வருமானமாக இனங்காண வேண்டியதுடன், மிகையில் / பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலதன மானியத்தின் கீழ் ஒதுக்கமாக காண்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 12 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதிக்கும் நிலையான சொத்து பதிவேட்டின் பிரகாரமான பெறுமதிக்கும் இடையே ரூபா 48,466,282 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். நிதிக்கூற்றுக்களின் மீதி சரியாக இருந்தமையினால் சொத்துப் பதிவேட்டின் மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களுடன் சரியான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,714,918 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 24,871,603 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வாடகை** | | |
| கதுருவெல பேரூந்து நிலைய தரிப்பிடத்தின் 18 கடைகள் மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலை சந்தியில் 19 கடைகள் என்பவற்றின் நிலுவை முற்பண தொகை ரூபா 2,120,821 தொகை 01 வருடம் முதல் 21 வருடம் வரையான காலவீச்சில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், பொலன்னறுவை பொது சந்தைக் கட்டிட தொகுதியில் 40 கடைகளில் ரூபா 18,088,750 தொகை மீள செலுத்தப்படாத கட்டுப் பணம் மற்றும் அதில் 46 கடைகளின் மாதாந்த வாடகைப் பெறுமதி ரூபா 7,756,758 தொகை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கதுருவெல பேரூந்து நிலைய கடை உரிமையாளர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வைத்தியசாலை சந்தியில் உள்ள கடைகள் தொடர்பாக மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்ற பரிந்துரையின் அடிப்படையில் செயற்படுத்தப்படும். பொலன்னறுவை பொது சந்தை கட்டிட தொகுதியின் கடைகளுக்காக எதிர்பார்த்த வசதிகள் மற்றும் தரம் காணப்படாமையினால் கடை உரிமையாளர்கள் வாடகை செலுத்துவதற்கு முன்வந்திருக்கவில்லை. குறைபாடுகளை பூர்த்தி செய்ததன் பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொலன்னறுவை பொது சந்தை கட்டிடத் தொகுதியின் மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்காக தொகுதி வழங்கல் ஒன்று (Bulk Supply) பெறப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு திகதி வரையிலும் அதற்குரிய ரூபா 1,306,208 தொகையான மின்சார பட்டியல் கட்டணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பட்டியல்களை கடை உரிமையாளர்களுக்கிடையே விகிதாசார அடிப்படையில் பகிர்ந்து அளவிடுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. | கட்டணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தமன்கடுவ பிரதேச சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்தளிக்கும் பரிந்துரையின் அறிக்கையின் மூலம் பொலன்னறுவை மாநகர சபைக்கு உரித்தான ரூபா 629,587 தொகையான மீதியுடன் 03 வங்கி கணக்குகள் செயற்பாடற்று காணப்பட்டதுடன், அவற்றின் தற்போதைய பெறுமதியை கண்டறிவதற்கு மாநக சபை தவறியிருந்தது. | உரிய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | ஆக்கபூர்வமான பணிகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |